செ.வெ.எண்-29 நாள்-16.10.2019

# அரியலூர் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தொடங்கி வைத்து, பார்வையிட்டார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பள்ளி கல்வித்துறையின் சார்பில் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி அரியலூர் மாவட்ட அளவிலான அறிவியல் கண்காட்சியை **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள்** குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு.வீ.ஆர்.சீனிவாசன்** அவர்கள் மற்றும் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் **திரு.பெ.அய்யண்ணன்** அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இக்கண்காட்சியினை குத்துவிளக்கேற்றி, மாணவர்களின் படைப்புகளை பார்வையிட்டு **மாவட்ட ஆட்சியர் அவர்கள்** தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு ஆண்டும் அனைத்துப் பள்ளி மாணவர்களின் அறிவியல் ஆர்வத்தினை ஊக்குவிக்கும் வகையிலும் அதனை வளர்க்கும் முயற்சியிலும் பள்ளி அளவிலும் கல்வி மாவட்ட அளவிலும் நடத்தப்பட்டு அதில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களின் படைப்புகளைக்கொண்டு, மாணவர்களையும் படைப்புகளை உருவாக்கப்படுகிறு. இக்கண்காட்சியானது 5 பிரிவுகளாக அறிவியல் கண்காட்சியுடன் அறிவியல் பெருவிழா, கணித கருத்தரங்கம் மற்றும் ஆசிரியர் கண்காட்சி ஆகியவை நடத்தப்பட்டது. வீட்டுக்கு ஒரு விஞ்ஞானியை உருவாக்கிடும் விதத்தில் இக்கண்காட்சியின் படைப்புகள் சிறப்பாக இருந்தது. கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள காட்சிப் பொருள்களின் முக்கியத் தலைப்புகள் ஆரோக்கியமும் சுகாதாரமும், ஆற்றல் வளங்கள் மேலாண்மை, உணவு பாதுகாப்பு, நீா வளங்களை பாதுகாத்தல், மறு சுழற்சி, கழிவு மேலாண்மை, போக்குவரத்து மற்றும் தொலை தொடர்பு, டிஜிட்டல் தொழில் நுட்பங்கள் ஆகிய தலைப்புகளில் மாணவ, மாணவிகள் கண்காட்சியினை அமைத்திருந்தனர்.

**161** பள்ளிகளிலிருந்து **321** படைப்புகள் கண்காட்சியில், **19** அரங்குகளில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. நடுவர்களால் ஒவ்வொரு பிரிவிலும் தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த மூன்று படைப்புகளுக்கு பரிசுகளும் பாராட்டுச் சான்றுகள் வழங்கப்படவுள்ளது என **மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்டக் கல்வி அலுவலர்கள் செல்வராஜ் (அரியலூர்), செல்வராசு (உடையார்பாளையம்) மற்றும் மணிமொழி (செந்துறை), பள்ளித்துணை ஆய்வாளர் ஆர்.பழனிசாமி, தலைமையாசிரியர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**